பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 27 திங்கட்கிழமை 12.09.2022 கதிர் 198

## சர்வதேச விசாரணை உடனடியாக வேண்டும்

### செல்வம் எம்.பி. வலியுறுத்து



காணாமல்போன உறவுகளுடைய புனிதப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டுமாக இருந்தால் அவர்கள் கோருகின்றசர்வதேசவிசாரணையே அவசியம் என்று ☞2

# ஆசியக் கிண்ணத்தை வென்றெடுத்த இலங்கை அணிக்கு ரணில் வாழ்த்து!



மகத்தான வெற்றியுடன் ஆசியக் கிண்ணத்தை வென்றெடுத்த இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

2022ஆம் ஆண்டு ஆசியக் கிரிக்கெட்கிண்ணத்தைவென்றெடுத்த இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட் டியில் பாகிஸ்தானுக்கு எதிராகச் சாதனை படைத்து எமது கிரிக்கெட் ☞2



# இலங்கை அரசே! எமது உறவுகளை சிறையில் வைத்துக் கொல்லாதே!!

## யாழில் சொந்தங்கள் உண்ணாவிரதப் போராட்டம்



(ஆர்.கலையமுதன்)

கொழும்பு – மகசின் சிறைச்சாலையில் ஏழு நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுடைய உறவினர்கள் யாழ்ப் பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக இன்று காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ☞2

## 'சொக்கா மல்லி'க்கும் இராஜாங்க அமைச்சு



துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சராக பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இன்று முற்பகல் ☞2

## அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம்

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை மேபீல்ட் சந்தியில் வீதி ஓரத்தில் அடையாளம் காணப்படாத நிலையில் இன்று காலை ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மக்கள் வழங்கிய தகவலையடுத்துசம்பவஇடத்துக்குச் சென்ற திம்புள்ள - பத்தனைப் பொலிஸார், ☞2

## 'சிங்கள – பௌத்த நாடு' என்ற நிலை மாறும் வரை இங்கு பிரச்சினை தீராது

### சமந்தா பவரிடம் மனோ எடுத்துரைப்பு



அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவருக்கும், இலங்கையின் ஏழு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், இன்று இந்நாட்டில் ஏற்பட்டிருப்பது ☞2

## இலங்கை வந்துள்ள மார்ட்டின் பல்வேறு தரப்பினருடன் பேச்சு



அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன் கொங் இலங்கை வந்துள்ளார்.

டுபாயிலிருந்து வந்த எமிரேட்ஸ் விமானசேவைக்குச் சொந்தமான ☞2

## நடிகை தமிதாவுக்கு கிடைத்தது பிணை



போராட்டச் செயற் பாட்டாளர்களில் ஒருவரான நடிகை தமிதா அபேரத்னவை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் இன்று உத்தரவிட்டுள்ளார்.

தமிதா அபேரத்ன சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ☞2

## பிரிட்டன் தூதரகம் சென்ற மஹிந்த மகாராணிக்கு இரங்கல் தெரிவிப்பு



கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்துக்கு இன்று சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## நடிகை தமிதா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் திலின கமகே, தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து ஆர்ப்பாட்டத்தின்போது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டிருந்தார்.

அதையடுத்து, அவரைச்செப்டெம்பர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அடையாளம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடயவியல் பிரிவு பொலிஸாரை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதையடுத்து நீதிமன்ற உத்தரவைப் பெற்று மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் காயங்களுடன் காணப்படுகின்றார்.

இவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா அல்லது வீதி விபத்தில் உயிரிழந்தாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஆசியக் கிண்ண..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணி, இலங்கையின் நற்பெயரை சர்வதேச அரங்கில் மீண்டும் உயர்த்தி வைத்துள்ளது.

அணித் தலைவர் உள்ளிட்ட அணியின் அனைத்து உறுப்பினர்களின் ஒற்றுமை மற்றும் மகத்தான அர்ப்பணிப்பால் இந்தச் சாதனை உருவானது என்று ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிக்கு வித்திட்ட அர்ப்பணிப்புள்ள பயிற்சியாளர்கள், நிர்வாகத்துக்கும் ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் சவாலான சூழ்நிலையிலும், ஒற்றுமையுடன் தாய்நாட்டின் வெற்றிக்காக அனைவரும் செய்த பொதுவான அர்ப்பணிப்பு, கிரிக்கெட் உலகுக்கு மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் அடுத்த தலைமுறைக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இந்த மகத்தான வெற்றிக்காக தம்மை அர்ப்பணித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார் - என்றுள்ளது.

## இலங்கை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2019, 2020 ஆகிய காலப்பகுதிகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 12 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இளைஞர்களினுடைய உறவினர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர்.

மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் எமது உறவுகளை விடுதலை செய், ஸ்ரீலங்கா அரசே எமது உறவுகளைச் சிறையில் வைத்துக் கொல்லாதே, சிறுபிள்ளைகளின் எதிர்காலத்தை சிறையில் சிதைத்து விடாதே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்துள்ளனர்.

## சிங்கள.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல. அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம், இந்நாட்டில், இன்னமும் தீராமல் இருக்கும், தேசிய இனப் பிரச்சினை ஆகும். இதற்குப் பிரதான காரணம், இந்த நாடு சிங்கள - பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதே ஆகும். பல மொழி, பல இனம், பல கலாச்சாரம் என்ற கொள்கை முற்று முழுதாக ஏற்கப்படும்வரை உள்நாட்டில் நிலைமாற்றம் ஏற்படாமல் தொடர்கின்றது. அதேபோல் வெளிநாட்டு மட்டத்தில், இலங்கை கடலில் இந்திய-சீன முரண்பாடு தீவிரமடைகிறது - என்று சமந்தா பவரிடம் எடுத்துக் கூறினார்.

கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், சமந்தா பவரை, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேம தாஸ, எம். ஏ. சுமந்திரன், ரவூப் ஹகீம், மனோகணேசன், தயாசிறி ஜயசேகர, ரிஷாத் பதியுதீன், ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது சமந்தா பவரிடம் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பன்மை கலாசார நாடக அதிகாரபூர்வமாக உருவாவதற்கு அமெரிக்கா துணை இருக்க வேண்டும். இதன் மூலம் இனப்பிரச்சினை தீரும் வாய்ப்பு ஏற்படும். அது இலங்கை மக்களது நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா நலன்களுக்கும் வாய்ப்பானது.

இலங்கையில் எல்லா காலத்திலும் மிகவும் நிர்க்கதியான பிரிவினராக தோட்ட தொழிலாளர்களே வாழ்கின்றனர். வறுமை, போசாக்கின்மை, சுகாதாரம், கல்வி, சிறுவர் தொழிலாளர், பெண்கள் மீதான அதீத சுமை ஆகியவை தொடர்பான புள்ளி விபரங்கள் தோட்ட தொழிலாளர் மத்தியிலேயே அதிகமாக இருக்கின்றன. இன்றைய நெருக்கடி நிலைமை அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளியுள்ளது.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச நிர்வாக இயந்திரம் பாரபட்சமாக நடக்கின்றது. எமக்கு அதன் மீது நம்பிக்கையில்லை. அங்கே அரசியலும், இனவாதமும் இருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழர்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைப்பதில்லை.

ஆகவே, அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவிடும் நாடுகள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும். இலங்கைக்கு வழங்கும் உதவிகளை சிவில் நிறுவனங்கள் மூலம் வழங்குங்கள். அதுவும் கண்காணிக்கப்பட வேண்டும். உதவி பெறும் பிரிவினர் யார் என்பதை சரியாக அடையாளம் காண வேண்டும்.

இலங்கையில் உரம் வாங்கி மக்களுக்கு வழங்க யூஎஸ்எய்ட் நமது நாட்டு அரசுக்கு வழங்கும் 40 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்கு நன்றி. ஆனால், இந்த 40 மில்லியன் உதவி தொகையில் நமது மக்களுக்கு ஒரு டொலரும் கிடைக்காது. ஏனென்றால் தோட்ட தொழி லாளர்கள் விவசாய தொழிலாளர்கள் என்றாலும், சொந்த நிலம் இல்லாத வர்கள்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை வாபஸ் பெறச் சொல்வது நல்லதே. ஆனால், இந்தச் சட்டத்துக்கு பதில் இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்த பின்னரே அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெரும். ஆகவே, உடன் தேவை, சட்டத்தை வாபஸ் பெற சொல்வதை விட, சட்டத்தின் அமுலாக்கலை இடை நிறுத்தம் செய்ய கூறுவதாகும்.

இன்று சில வாரங்களாக கைது செய்யப்படும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை விடுதலை செய்ய நாமும் கோருகின்றோம். இவர்கள் சில வாரங் களாகக் கைது செய்யப்படுகின்றவர்கள். ஆனால், அதைவிட தமிழ் அரசியல் கைதிகள் நிலைமை படுமோசம்.

தமிழ் அரசியல் கைதிகள் 5,10,15, 20 வருடங்களாகச் சிறையில் இருக்கின்றவர்கள். சிலர் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவிக்கிறார்கள். இன்னும் சிலர் வழக்குகளை எதிர்நோக்கியுள்ளனர். இன்னமும் சில தொடர்ந்து தடுப்பு காவலில் உள்ளனர். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். மீண்டும் வழக்குகள் தொடரக் கூடாது - என்றார்.

## இலங்கை வந்துள்ள..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.கே 652 என்ற விமானத்தில் அவர் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளார்.

அவர் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்திக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தபோது விடுத்த அழைப்புக்கு அமைய அவரது இந்த விஜயம் அமைந்துள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங்கை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க ஆகியோர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரையும் அவர் சந்திக்கின்றார்.

## 'சொக்கா மல்லி'..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பதவிப்பிரமாணம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சர்வதேச..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் றெலோ அலுவலகத்தில் இன்று பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்கு றெலோ சார்பாக சுரேன் குருசாமியை அனுப்பியிருக்கின்றோம். இரண்டு, மூன்று தினங்களில் நானும் செல்லலாம் என எண்ணியுள்ளேன். அது எந்தளவுக்குச் சாத்தியப்படுமோ தெரியவில்லை.

ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையிலே எங்களுடைய இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

காணாமல்போனவர்களுடைய உறவுகள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய புனிதப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டுமாக இருந்தால் அவர்கள் கோருகின்ற சர்வதேச விசாரணை மிகவும் அவசியம்.

இந்தியா, அமெரிக்கா உட்பட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினை சார்பாக ஐ.நா. எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவை வழங்க வேண்டும் - என்றார்

## பிரிட்டன் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஸ்தானிகராயைத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் வரவேற்றார்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் புத்தகத்தில் அனுதாபக் குறிப்பை எழுதிய மஹிந்த, ஏழு தசாப்தங்களாக இரண்டாம் எலிசபெத் மகாராணி, உலக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுபடுத்தினார்.






காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீர்த்துப் போகும் விடயம்

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகி விட்டது.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழினத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் மற்றும் யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு நீதி வேண்டி, நியாயம் கேட்டு, அந்த மனித உரிமைகள் கவுன்ஸிலின் தளத்தைத்தான் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கின்றது தமிழினம்.**

**13 ஆண்டுகள் கடந்தும் நீதி கிட்டும் என்று நம்புவதற்கான ஒரு சிறு ஒளிக்கீற்றுக் கூட இன்னும் தெளிவாகத் தோற்றவில்லை. எனினும் தமிழினம் சளைக்காது நம்பிக்கையுடன், கவுன்ஸிலின் தளத்தைப் பார்த்துக்கொண்டு அதனிடமிருந்து ஒருநீதி, நியாயத்தீர்வுகிட்டும்என்றமுழுநப்பாசையுடன் ஏங்கியபடி காத்திருக்கின்றது.**

**இவ்விடயத்தில் மெல்ல மெல்ல நீதி நிலைநாட்டப்படுவதை நோக்கி விவகாரங்கள் நகர்த்தப்படுகின்றன என்ற படத்தை மேற்குலகமும் இராஜதந்திர வட்டாரங்களும் கோடி காட்ட முற்பட்டாலும், உண்மை நிலை அதுவல்ல என்பதை சுயாதீனத் தரப்புகள் தமிழர் தலைமைக்கு கோடி காட்டாமல் இல்லை.**

**அரசியல் ஆய்வாளர் சி.அ.ஜோதிலிங்கம் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டி இருக்கின்றார். அதுவும் அவதானிக்கப்பட வேண்டியது.**

**இலங்கையின் ஆட்சி பீடம் மீது சுமத்தப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள்பாரதூரமானவை. அவை குறித்து 13 ஆண்டுகளாகத் தீர்மானங்களுக்கு மேல் தீர்மானங்கள் நிறைவேற்றிய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், அந்த விடயங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியையும் பொறுப்பு கூறலையும் நிலை நாட்டச் செய்வதில் காத்திரமான முன்னேற்றம் எதையும் செயலில் காட்டவே இல்லை. தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலை நிலை நாட்டுவதற்கான காத்திரமான அணுகுமுறைகள் தோல்வியடைந்த நிலையில், சர்வதேச மட்டத்திலான நியாயமான அணுகுமுறை ஒன்றை கவுன்ஸில் இன்னும் வலிமையாக முன்வைத்து நடைமுறைப்படுத்த முயலவில்லை.**

**கவுன்ஸில் தொடர்ந்து வெளியிடும் வெற்று வார்த்தை அறிக்கைகள், தீர்மானங்கள் இவ்விடயத்தை ஒட்டிக் காத்திரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையும் அருகி விட்டது.**

**அதற்கிடையில் இலங்கை தொடர்பான தனது வருடாந்த அறிக்கைகள், அறிவிப்புகள், பிரேரணைகள்போன்றவற்றில், யுத்த காலக் கொடூரங்களுக்கு நீதியை நிலை நாட்டும் முயற்சிகளை ஒரு புறம் தள்ளி, அவற்றுக்கு மேலதிகமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையின் பலவீனம், பயங்கரவாதத் தடை சட்டத்தின் மீள் பிரயோகம், அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டோர் முறையற்ற விதத்தில் கைது, பொருளாதார சீரழிவுக்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்திப் பொறுப்பு கூறலை நிலைநாட்டல் என்றெல்லாம் பல பல விடயங்களை அதற்குள் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது சர்வதேச சமூகம்.**

**சர்வதேசத்தின் இந்த நடவடிக்கை மூலம் இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மூலம் ஈழத் தமிழர்களுக்கு நீதி கிட்டச் செய்யும் முயற்சிகள் நீர்த்துப் போயிருக்கின்றன என்பதே உண்மை.**

# தெற்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்; சந்தேக நபர்களுக்கு கடும் எச்சரிக்கை

## பொலிஸார் விடுத்துள்ள சவால்



தென் மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகப் பதிவான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், கொலைகளுடன் தொடர்புடைய அனைவரையும் அடையாளம் கண்டுவிட்டதாக தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் றோஹண தெரிவித்தார்.

குற்றவாளிகளை சுதந்திரமாக நடமாட ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும், 6 வாரங்களுக்குள் அனைத்து சம்பவங்களுடனும் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து காட்டுவதாகவும், பொலிஸாரா குற்றவாளி களா என ஒரு கை பார்த்து விடலாம் எனவும் அவர் சவால் விடுத்தார்.

156 ஆவது பொலிஸ் தின நிகழ்வுகளாக காலி – கோட்டையில் நடந்த விடே கொண்டாட்ட நிகழ்வின் போதே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாக –

கடந்த ஜுன் முதலாம் திகதி முதல் தென் மாகாணத்தில் இதுவரை துப்பாக்கிதாரிகளால் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 4 சம்பவங்கள் தொடர்பிலான பூரண விசாரணை நிறைவு செய்யப்பட்டு சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே போல் துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ரீ 56 ரக துப்பாக்கிகள், பிரவுனின் ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏனைய சம்பவங்களின் சந்தேக நபர்களையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்த, சந்தேக நபர்கள், அந்தக் கொலைக்காரர்கள், ஆயுதத்தை கையிலெடுத்தவர்கள் , குற்றத்தின் பின்னர் மறைந்திருக்க அல்லது சுதந்திரமாக இருக்க முடியும் என நினைப்பார்களாயின், அதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்பதை அவர்களுக்கு ஞாபகபப்டுத்த விரும்புகின்றேன்.

இரு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், 4 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்களின் கீழ் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எமக்கு வழங்கப்பட்டுள்ள சவாலை நாம் ஏற்கின்றோம். பார்க்கலாம் யார் சவாலில் ஜெயிக்கின்றார்ரகாள் என்று. நாமா அல்லது குற்றவாளிகளா என இன்னும் 6 வாரங்களில் விடை தெரிந்துவிடும்.

ஒரு போதும் ஆயுதங்களுடன் நடமாட நாம் அனுமதிக்கப் போவதில்லை. அனைவரையும் அடையாளம் கண்டுள்ளோம். உதவியவர்கள், மறைமுகமாக உதவியவர்கள், எஸ்.எம்.எஸ். அனுப்பியவர்கலில் இருந்து அனைவரையும் கண்டுபிடித்துவிட்டோம். – எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசு 6 மாதங்களுக்குமேல் தாக்குப்பிடிக்காது!

## குமார வெல்கம எம்.பி. ஆரூடம்

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எதிர்வரும் 6 மாதங்களுக்கு மேல் நீடிக்காது. அந்த அமைச்சரவையில் அங்கத்துவம் பெற ஒருபோதும் தான் எதிர்பார்க்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அங்கத்துவம் பெறத் தயாராக இல்லை.

காரணம் தற்போது அவருடனுள்ள தரப்பினருடன் இணைந்து இந்த அரசாங்கத்தை நீண்ட நாள்கள் கொண்டு செல்ல முடியாது. பொதுஜன பெரமுனவின் சிலருக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவ்வாறு பரிந்துரைக்கப்படுபவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை.

அவ்வாறானவர்களுடன் எம்மாலும் இணைந்து பயணிக்க முடியாது. எதிர்வரும் தேர்தல்களில் நாம் எமது கட்சியிலேயே போட்டியிடுவோம். விமல் வீரவன்ஸ , வாசுதேவநாணயக்காரஉள்ளிட்டஅனைத்து தரப்பினருடனும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்முடன் இணைந்து பயணிக்குமா என்று கூற முடியாது. ஆனால் அவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதற்கே நாம் முயற்சிக்கின்றோம்.

அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் இணைவார்கள் என்று நான் எண்ணவில்லை. காரணம் இந்த அரசாங்கம் எதிர்வரும் 6 மாதங்களின் பின்னர் நிலைத்திருக்காது என்ற நிலைப்பாடே காணப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று எண்ணுகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவராவார். சஜித் பிரேமதாஸ தற்போதுள்ளதை விட தலைமைத்துவத்தை கைகளில் எடுக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும். – என்றார்.

# சுகாதார துறைக்கு அவசியமான தேவைகளை பெற்றுக்கொள்வதற்கு புதிய வங்கிக் கணக்கு!

## சுகாதார அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

சுகாதார துறைக்கு அவசியமான தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளிலிருந்து சுகாதாரத் துறைக்கு அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு உலக சுகாதார அமைப்புடன் இணைந்ததாக இந்தக்கணக்குஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை நாடு இக்கட்டான நிலையை எதிர் நோக்கியுள்ள நிலையில், உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் உதவியின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆக்கிரமித்த கிழக்கு உக்ரைனில் இருந்து பின்வாங்குகின்றன ரஷ்யத் துருப்புகள்





கீவ்,செப்.12

கிழக்கு உக்ரைனில் முக்கிய நகரங்களை உக்ரைன் படைகள் மீட்டன. ரஷிய படைகள் அங்கிருந்து பின்வாங்கின.

நேட்டோ அமைப்பில் சேர்ந்து உக்ரைன் பாதுகாப்பு தேட முயன்றது. உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரிமியாவை தன்னில் சேர்த்துக் கொண்டுள்ள ரஷ்யாவுக்கு, உக்ரைனின் இந்த நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போர் தொடுத்தது.

முதலில் உக்ரைனின் இராணுவக் கட்டமைப்புகளை தாக்குவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தாக்குதல் தொடுப்பதாகக் கூறிய ரஷ்யா பின்னர் ஆஸ்பத்திரிகள், பள்ளிகள், ரயில் நிலையங்கள் என தனது தாக்குதல் எல்லையை விரிவுபடுத்தியது. உக்ரைன் படை வீரர்கள் மட்டுமல்லாமல் அப்பாவி மக்களும் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனாலும் தலைநகர் கீவை கைப்பற்ற வேண்டும் என்ற ரஷ்ய கனவு, உக்ரைனின் கடும் எதிர்ப்பால் நிறைவேறாமல் போனது. அதன் பின்னர் ரஷ்யாவின் பார்வை, கிழக்கு உக்ரைன் மீது படிந்தது. டான்பாஸ் பகுதியை கைப்பற்றிவிட வேண்டும் என்று துடித்தது. அந்தப் பகுதியின் முக்கிய நகரங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. இதில் அங்கு பல நகரங்கள் ரஷ்யாவின் வசமாகின. அந்த நகரங்களை மீட்டெடுக்க ரஷ்யாவுடன் உக்ரைன் தொடர்ந்து போரிட்டு வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனில் கிழக்கு பகுதியில் ரஷ்யா வசம் போன முக்கிய நகரங்களை உக்ரைன் படைகள் மீட்டன. அங்கிருந்து ரஷ்யா படைகள் பின்வாங்கின என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி உக்ரைன் அதிகாரிகள் தெரிவிக்கையில், கிழக்கில் ரஷிய படைகளுக்கு முக்கிய விநியோக மையமாக குபியன்ஸ்க் செயல்பட்டு வந்தது. அங்கும் உக்ரைன் படைகள் நுழைந்துள்ளன என குறிப்பிட்டனர். ரஷ்ய இராணுவ அமைச்சகம், தனது படைகளை மீண்டும் ஒருங்கிணைக்க அனுமதிக்கும் வகையில் இஸியம் நகரில் இருந்து திரும்பப்பெறப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கிறது.

மேலும் டொனெட்ஸ்க் போர் முனையில் முயற்சிகளை வலுப்படுத்தும் விதத்தில், மூன்றாவது முக்கிய நகரமான பலாக்லியாவிலிருந்து தங்கள் படைகள் திரும்பப் பெறப்பட்டதையும் ரஷ்ய இராணுவ அமைச்சகம் உறுதிப்படுத்தியது.

தற்போது போரில் உக்ரைன் முன்னேறினால், கடந்த ஏப்ரல் மாதம் தலைநகர் கீவின் சுற்றுப்புறங்களில் இருந்து ரஷ்யா வெளியேறியதில் இருந்து இது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என தகவல்கள் கூறுகின்றன.

இதையொட்டி உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் வீடியோவில் வெளியேற்றிய உரையில் கூறும்போது, இந்த மாத தொடக்கத்தில் புதுப்பிக்கப்பட்ட பதிலடியை ஆரம்பித்ததில் இருந்து ரஷ்யாவிடம் இருந்து 2 ஆயிரம் ச.கி.மீ. பகுதியை உக்ரைன் விடுவித்துள்ளது எனத் தெரிவித்தார். இஸியம் நகரில் இருந்து ரஷ்யப் படைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என அந்த நாடே ஒப்புக்கொண்டிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

## பப்புவா நியூ கினியா நாட்டில் நிலநடுக்கத்தால் ஐவர் மரணம்





லே,செப்.12

பப்புவா நியூ கினியா நாட்டில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால், இடிபாடுகளில் சிக்கிஇதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

பப்புவா நியூ கினியாவில் மொரோப் மாகாணத்திற்கு உட்பட்ட மிக பெரிய துறைமுக நகராக அறியப்படும் லே நகரம் உள்ளது.

இந்நகரில் இருந்து 65 கி.மீ. தொலைவில் நேற்று காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவாகி உள்ளது என அமெரிக்க புவி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்துள்ளனர் எனவும், சில சுகாதார நிலையங்கள், வீடுகள், கிராமப்புற சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவை சேதம் அடைந்துள்ளன எனவும் ஐ.நா. அறிக்கையில் கூறியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சார உட்கட்டமைப்பு சேதமடைந்துள்ளது. இதனால் கிழக்கு பகுதி முழுவதும் மின்தடை ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர் எஅ உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## ஸ்காட்லாந்தில் இருந்து லண்டனுக்கு ராணி எலிசபெத் பூதவுடல் வருகின்றது

### வழியெங்கும் மக்கள் கண்ணீர் அஞ்சலி

லண்டன்,செப்.12

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் உடல் ஸ்கொட்லாந்தில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்டது. வழியெங்கும் பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். இங்கிலாந்து மக்களால் மட்டுமின்றி உலக மக்களாலும் நேசிக்கப்பட்ட ராணி எலிசபெத் (வயது 96) கடந்த 8 ஆம் திகதி ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் கோட்டையில் மரணம் அடைந்தார். அவரது உடலுக்கு லண்டனில் இறுதிச்சடங்கு 19 ஆம் திகதி நடக்கிறது. அன்று வங்கி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் மன்னராக சார்ள்ஸ் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார். அப்போது அங்கு எக்காளம் ஊதப்பட்டது. குண்டுகள் முழங்கின. இந்த நிகழ்ச்சியில் ராணி கமிலா, இளவரசர் வில்லியம் கலந்து கொண்டனர். இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரசும், முன்னாள் பிரதமர்கள் 6 பேரும் பங்கேற்றனர். அன்றைய தினத்தில் அரச குடும்பத்தினர் விண்ட்சார், பால்மோரல் மற்றும் லண்டனில் ராணியின் இல்லங்களில் வைக்கப்பட்ட மலர் அஞ்சலி மற்றும் இரங்கல் செய்திகளைப் பார்வையிட்டனர். மேலும் அரச குடும்பத்தின் ஒற்றுமையைக் காட்டும் வகையில் இளவரசர் வில்லியம், இளவரசி கேதரின் மற்றும் இளவரசர் ஹாரி, இளவரசி மேகன் ஆகியோர் விண்ட்சார் கோட்டையின் வாயிலில் கூடி மலரஞ்சலி செலுத்திய பொதுமக்களிடம் பேசினர்.

இந்த நிலையில் ராணி எலிசபெத் உடல், 'ஓக்' மரத்தில் செய்யப்பட்ட சவப்பெட்டியில் வைக்கப்பட்டு, நேற்று அவருக்கு பிடித்தமான பால்மோரல் கோட்டையில் இருந்து கருப்பு நிற காரில் புறப்பட்டது. பால்மோரல் கோட்டையில் இருந்து அந்த கார் 175 மைல் தொலைவில் உள்ள ஸ்கொட்லாந்து தலைநகரான எடின்பரோ நகருக்கு 6 மணி நேர பயணத்துக்கு பின்னர் நேற்று மாலை போய்ச் சேர்ந்தது. வழியெங்கும் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் வரிசையில் அமைதியாக நின்று காரில் வைக்கப்பட்டிருந்த ராணியின் உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். ராணியின் உடல் எடுத்துச்செல்லப்பட்ட காரைத் தொடர்ந்து வந்த காரில் ராணியின் மகள் இளவரசி ஆனி வந்தார். எடின்பரோ நகருக்கு எடுத்துச்செல்லப்பட்ட ராணியின் உடல், அங்குள்ள ஹோலிரூட் ஹவுஸ் மாளிகையில் வைக்கப்பட்டது. இன்று ராணி எலிசபெத்தின் உடல் அங்குள்ள செயின்ட் கில்ஸ் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்படும். ஹோலிரூட் ஹவுஸ் மாளிகையில் இருந்து செயின்ட் கில்ஸ் தேவாலயத்துக்கு ஒரு ஊர்வலம் நடத்தப்படுகிறது. தேவாலயத்தில் மன்னர் சார்ள்ஸும், அரச குடும்பத்தினரும் வழிபாட்டில் கலந்து கொண்டு, ராணியின் உடலைப் பெற்றுக்கொள்வார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் பார்வைக்கு 24 மணி நேரம் பூதவுடல் வைக்கப்படுகிறது. நாளை செவ்வாய்க்கிழமையன்று ராணியின் உடலை அவரது மகளான இளவரசி ஆனி தனி விமானத்தில் லண்டன் எடுத்துச்செல்கிறார். அங்கு புதன்கிழமை முதல் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் ராணியின் உடல் 4 நாள்கள் வைக்கப்படுகிறது. பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படுவார்கள். இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ராணியின் உடலுக்கு பல லட்சம் மக்கள் அஞ்சலி செலுத்த திரண்டு வருவார்கள் என்பதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.



# ராஜஸ்தானில் நேற்று மட்டும் மின்னல் தாக்கி ஏழு பேர் சாவு

ஜெய்ப்பூர்,செப்.12

ராஜஸ்தானில் மீண்டும் பருவமழை தீவிரமடைந்துள்ளது. மின்னல் தாக்கி ஏழு பேர் வரைப் பலியாகியுள்ளனர். மாநிலத்தின் கிழக்குப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. காற்றழுத்த தாழ்வு மண்டம் மேற்கு, வடமேற்கு திசையில் சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் நோக்கி நகர்ந்து வலுவிழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது .


ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த சில நாள்களாக மழை வலுவிழந்து இருந்த நிலையில், சனிக்கிழமை மீண்டும் பருவமழை தொடங்கியுள்ளது. வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ஞாயிற்றுக்கிழமை வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி உள்ளது. இது ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் நிலை கொண்டுள்ளது.

ராஜஸ்தானின் ஜலாவர் மற்றும் உதய்பூர் மாவட்டங்களில் நேற்று மட்டும் மின்னல் தாக்கியதில் 7 பேர் பலியாகி உள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர். காற்றழுத்த தாழ்வு மண்டம் மேற்கு, வடமேற்கு திசையில் சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் நோக்கி நகர்ந்து வலுவிழக்கும். இதன் காரணமாக நாளை முதல்15 ஆம்திகதிவரைகிழக்குராஜஸ்தானில் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# தரித்திருந்த லொறி மீது மோதிய பஸ் 7 பேர் உயிரிழப்பு: மூவருக்குக் காயம்

## சத்தீஸ்கரில் இன்று அதிகாலை சம்பவம்



ராய்ப்பூர்,செப்.12

சத்தீஸ்கர் மாநிலம் கோர்பா மாவட்டத்தில், சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது. மடாய் காட் அருகே இன்று அதிகாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அதிவேகமாக சென்ற பஸ் லொறி மீது மோதியதில் பஸ்ஸின் ஒரு பகுதி முழுவதும் நொறுங்கியது.

விபத்து பற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 7 பேர் பலியாகினர். 3 பேர் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# அயோத்தி ராமர் கோவில் ரூ.1,800 கோடி செலவில்!

## அடுத்த ஆண்டில் கட்டுமானம் பூர்த்தி



அயோத்தி ராமர் கோவில் இந்தி குயப் பணத்தில் 1,800 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் பத்தாயிரம் கோடி ரூபா) மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதாக அறக்கட்டளை தெரிவித்துள்ளது. அயோத்தி, அயோத்தி ராமர் கோவில் கட்டுமானப்பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

கோயில் கட்டுவதற்காக உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட ஶ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பிறகு அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் கூறும்போது, இந்த கூட்டத்தில் 15 அறக்கட்டளை உறுப்பினர்களில் 14 பேர் கலந்துகொண்டனர். கூட்டத்தில்கோயில்வளாகத்தில் இராமாயணக் காலத்தின் முக்கிய கதாபாத்திரங்கள் மற்றும் முக்கிய இந்து சமயப் பார்ப்பனர்களின் சிலைகளை வைக்க முடிவுசெய்யப்பட்டு உள்ளது. நீண்ட ஆலோசனை மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் பரிந்துரைகளுக்குப் பிறகு, அறக்கட்டளையின் விதிகள் மற்றும் துணை விதிகள் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டன.

நிபுணர்கள் தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் இராமர் கோவில் கட்டுவதற்கு மட்டும் ரூ.1,800 கோடி செலவாகும் என அறக்கட்டளை மதிப்பிட்டுள்ளது. 2023 டிசம்பரில் கோயிலின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து விடும். 2024 ஜனவரியில் மகர சங்கராந்தி பண்டிகையின் போது ராமர் கருவறையில் அமர்ந்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. - இவ்வாறு சம்பத் ராய் கூறினார்.

# கிணற்றில் இறங்கிக் காப்பாற்ற முயன்றவரை உடலை இறுக்கிக் கொன்றது மலைப்பாம்பு!

காவேரிப்பட்டணம்,செப்.12

காவேரிப்பட்டணம் அருகே ஆழக் கிணற்றில் வீழ்ந்த மலைப்பாம்பை இறங்கி காப்பாற்ற வந்த தொழிலாளியை இறுக்கி கொன்றது அந்த மலைப்பாம்பு.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப் பட்டணம் அருகே கல்குட்டபட்டியை அடுத்த மேல்கொட்டாயை சேர்ந்தவர் சின்னசாமி. இவர் விவசாயம் செய்து வருகிறார். இந்நிலையில் இவருடைய 50 அடி ஆழ கிணற்றில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு மலைப்பாம்பு விழுந்ததை பார்த்துள்ளார். அந்த மலைப்பாம்பை கிணற்றிலிருந்து வெளியே எடுப்பதற்காக இன்று நடராஜ் என்பவர் முன்வந்து கிணற்றில் இறங்கியுள்ளார். மலைப்பாம்பை கிணற்றின் பாதி வரை தூக்கி வந்த பின்பு எடை தாங்காமல் மலைப்பாம்பும் அவரும் கிணற்றில் விழுந்துள்ளனர். அப்பொழுது அவரை மலைப்பாம்பு இறுக்கி பிடித்துள்ளது. அவர் கூச்சலிடவே அருகில் இருப்பவர்கள் கிருஷ்ணகிரி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் விரைந்து வந்த தீயணைப்பு நிலைய அலுவலர் வெங்கடாசலம் தலைமையில் தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் நடராஜனை மீட்க போராடினர். ஆனால் மலைபாம்பு அவரை இறுக்கியதில் நடராஜ் உயிரிழந்தார்.

பின்னர் அவரது உடலை தீயணைப்புத் துறையினர் மீட்டனர். இது குறித்து காவேரிப்பட்டணம் இன்ஸ்பெக்டர் முரளி வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்.

மலைபாம்பை காப்பாற்ற சென்றவர் அந்த பாம்பாலேயே உயிரிழந்த தகவல் அறிந்த சுற்றுப்பகுதியை சேர்ந்த ஐந்நூருக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அங்கு திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு









# தான்தோன்றீஸ்வரர் தேர் நேற்று

(க.கிருபாகரன்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் பதினான்காம் நாளான நேற்று வேத விற்பன்னர்கள் மந்திரங்கள் இசைக்க, அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தேவாரப் பாடல்கள் பாடி வர, பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ, அடியார்கள் வடம் பிடித்து இழுக்க, சிவனும், உமையம்மனும் சித்திரத் தேரிலும், பிள்ளையார் மற்றைய தேரிலும் ஏறி வலம் வந்தனர். இத்தேரோரோட்டப் பெரு விழாவில் நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் வந்து கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வாலய உற்சவம் கடந்த ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு பேரின்ப ஞான பீடத்தில் பௌர்ணமி தின காயத்திரி மகாயாகம்

( காரைதீவு நிருபர் சகா)

உலக சேமத்திற்காக மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்ப ஞான பீடத்தில் குரு முதல்வர் குரு பகவான் ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி கே.எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகளினால் புனித பௌர்ணமி தின காயத்திரி மகாயாகம், நேற்று முன்தினம் சனிக்கிழமை நடாத்தப்பட்டது.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான உயிர் ஜீவ மூலிகைகள் இடப் பட்டு இம் மகாயாகம் நூற்றுக்கணக்கான பக்தர் கள் சூழ காலை 10மணிக்கு நிகழ்த்தப்பட்டது.

உலகில் தர்மம் தழைத்தோங்கி, சாந்தி,சமாதானம், சுபீட்சமான வாழ்வு அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் எனும் பொதுநல நோக்கில் உலக சேமத்திற்கான இப்புனித பௌர்ணமி காயத்திரி மகா யாகம் நடாத்தப்பட்டது. ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி கே.எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகளினால் இவ்வுலகினை ஆளும் ப்தரிஷிகள் 18 சித்தர்களை ஆவாகனம் செய்து, 18 பூரண கலசங்கள் வைக்கப்பட்டு முறையே திருவிளக்குப் பூஜை, சுவாமிகளின் ஞான குருநாதர் காயத்திரி சித்தர் பகவான் ஆர்.கே. முருகேசு சுவாமிகளின் தெய்வீக திருப்பாதங்களுக்கு அபிஷேக ஆராத னைகள் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து காயத்திரி மகா யாகம், காயத்திரி மகா மந்திரம், மகாமிருத் தியுஞ்ஜெய மந்திரம், தன்வந்திரி மந்தி ரம் போன்ற மிகச் சக்தி வாய்ந்த மகா மந்திரங்கள் ஜெபிக்கப்பட்டு மகா யாகம் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து சுவாமிகளினால் வருகை தந்திருந்த பக்தர்களுக்கு ஆசிகளும், ஆன்மீக அருளுபதேசமும் அன்னதானமும் வழங்கி வைக்கப்பட்டன.

# 14 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம் 17 வயதுச் சிறுவன் விளக்கமறியலில்

## கிண்ணியா பொலிஸ் பிரிவில் சம்பவம்

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 14 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் 17 வயதுடைய சிறுவனை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றப் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் மேற்படி சிறுவனை முன்னிலைப்படுத்திய போதே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறுவன் கிண்ணியா - மாஞ்சோலைசேனை பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

14 வயதுடைய தனது மகளை காணவில்லை என தந்தை கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் இதனையடுத்து கிண்ணியா பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி மாணிக்க ராசா நளினி உட்பட அவரது குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் போது சிறுமி கண்டுபிடிக்கப்பட்டார் எனவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் சிறுமி சட்ட வைத்திய நிபுணர் அறிக்கைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

# ‘பன்னாட்டுக் குற்றங்கள்’ நூல் நேற்று திருமலையில் வெளியீடு








(ஹஸ்பர)

கலாநிதி. ரீ ஞானேஸ்வரன் எழுதிய ’பன்னாட்டுக் குற்றங்கள்’ (International crimes) எனும் நூல் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையிலுள்ள ஜூபிலி மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

காலை 10 மணியளவில் சுடரேற்றல் மற்றும் அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிழ்வினை திருகோணமலை மாவட்ட ஆயர் வண.கலாநிதி. நோயல் இம்மானுவேல் தலைமை தாங்கினார். அவரது தலைமை உரையைத் தொடர்ந்து வருகையாளர்களுக்கு நூல்கள் கையளிக்கப்பட்டன .

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியற்துறைத் தலைவர் பேராசிரியர் நூலை மதிப்பாய்வு செய்து உரையாற்றியமையுடன் இந்நூலின் முக்கியத்துவம் பற்றியும் தன் உரையில் குறிப்பிட்டு பேசியிருந்தார். அதைத் தொடர்ந்து நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது. இந்நூலானது ஆங்கிலம், ஜேர்மன், டொச் மற்றும் சிங்களம் முதலான மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளமை பற்றியும் நூலாசிரியர் தன் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வை ஊடகவியலாளர் ச. திருச்செந்தூரன் தொகுத்து வழங்கியமையுடன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் திரு சி. தண்டாயுதபாணி முதலான அரசியல் பிரமுகர்கள் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ். சிறீதரன், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமையுப் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# அமரர் லயன் மகாதேவா குடும்பத்தினரால் ஸ்கந்தா ஆரம்ப பாடசாலையில் அபிவிருத்தி!

மிகுந்த சமூகசேவையாளராகவும் தன்னலம்கருதா பல அபிவிருத்திப் பணிகளை கந்தரோடைக் கிராமத்தில் மேற்கொண்ட அமரர் லயன் மகாதேவாவின் குடும்பத்தினரால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்கு பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை தனித்துவமாக -தனியான ஓர் இடத்தில் - உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தம்மையே அர்ப்பணித்து சேவையாற்றியவர்கள் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த அமரர் லயன் செ.மகாதேவா, லயன் ந.சண்முகவேல் ஆகியோராவர்.

பாடசாலைக்குரிய காணி தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் குடும்பத்தினருடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக் கொடுத்து, தனியான கட்டடம் உருவாக்கத்துக்கு தாமும் தமது நிதிகளில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வோம் என உத்தரவாதமளித்து பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதி, சிறுவர் முற்றம், சுற்றுமதில் முகப்புப் பகுதி என உருவாக்கினார்கள்.





அதன் தொடர்ச்சியாக அமரர் லயன் மகாதேவாவின் மகன் லயன் ம.பிரிதுவிராஜா தனது தந்தை ஆரம்பித்த பணியை சிரம்மேலேற்று பாடசாலையின் முழு வழாகத்துக்கும் சுற்றுமதில் அமைத்து தந்தையின் காலத்தில் உருவாக்கப்பட்ட சிறுவர் முற்றத்தைப் புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இதேவேளை, லயன் ம.பிரிதுவிராஜாவால் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தனது தாய், தந்தைகளான அமரர்களான லயன் மகாதேவா - லயன் பூமாதேவி தம்பதிகள் ஞாபகார்த்தமாக இருமாடிக் கட்டடங்களை ரூபா 2 கோடிக்கு உருவாக்கி வழங்கி, இன்றுவரை அதன் பராமரிப்புகள், வர்ணம் பூசுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தடை செய்யப்பட்ட உண்டியல் முறை மூலம் கோடிக்கணக்கான ரூபா நிதி பரிமாற்றமாம்

### வங்கி கணக்குகள் பரிசோதனை

உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத முறைகளின் மூலம் இரண்டு மாதங்களில் ஒன்பது கோடி ரூபா பணப் பரிமாற்றம் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத பணப் பரிமாற்ற முறைமைகள் தொடர்பில் மத்திய வங்கி மற்றும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மடகாஸ்கரில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்வது என்ற போர்வையில் உண்டியல் கடத்தல்காரர்களால் இந்தப் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தக் கடத்தல் தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி கீதல் தலைமையில் விசேட குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

## பயன்படுத்தாத 250 வாகனங்களுக்கு மாத வாடகை வழங்கப்பட்டுள்ளதாம்!

அரச நிறுவனங்கள் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வந்த சுமார் 250 வாகனங்கள் எரிபொருள் இன்மை காரணமாக பயன்படுத்தப்படாது தரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுக்கு மாத வாடகை செலுத்தப்பட்டுள்ளதாக சிங்கள நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

குறித்தவொரு அரச நிறுவனத்துக்கு 10 வாகனங்கள் வரையில் வாடகைக்கு பெற முடியும் என்பதுடன், வாகனமொன்றுக்கு மாத வாடகையாக லட்சம் ரூபா செலுத்தப்பட வேண்டும்.

நாட்டில் தற்போது உள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, செலவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என நிதி அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், அவற்றை சில அரச நிறுவனங்கள் அசட்டை செய்து வருகின்றன எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## இலங்கைக்குக் கிடைக்கின்ற அந்நிய செலாவணி அதிகரிப்பு

### மத்திய வங்கி தகவல்

கடந்த மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்களால் நாட்டுக்கு அனுப் பப்பட்ட அந்நிய செலாவணியில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி கடந்த மாதம் 325.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு தொழிலாளர் களால் நாட்டுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 279.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணப்பரிமாற்றமாக பெறப்பட்டது. இந்த நிலையில் கடந்த மாதம் வெளிநாட்டு தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

மேலும், இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரை பெறப்பட்ட மொத்தப் பணத்தின் பெறுமதி 2214.8 மில்லியன் அமெரிக்க டொலர் என மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் படுகின்றது.

## 2 கோடியே 30 லட்சம் அமெ.டொலர்பெற இலங்கை அரசு ஒப்பந்தம் கைச்சாத்து!

2 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொது மூலதன வளத்திலிருந்து 20 கோடி அமெரிக்க டொலர் கடனாக வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

# தம்பலகாமம் கல்மெடியாவ தெற்கில் யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்





(ஹஸ்பர்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில்காட்டுயானைதாக்கிஒருவர்உயிரிழந்துள்ளார். கல்மெடியாவ தெற்கை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பியதிஸ்ஸ பண்டார (வயது 39) என்பவரே யானைக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை விறகு எடுக்கச் சென்றவரே மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததனால் அவரை தேடிச் சென்ற வேலையிலேயே ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக நேற்று அவர் மீட்கப்பட்டுள்ளார். மூன்று நாள்கள் ஆன படியினால் உயிரிழந்தவரின் உடல் உறுப்புக்கள் சிதைந்து காணப்படுகின்றன. சில பகுதிகள் காட்டு மிருகங்களால் வேட்டையாடப் பட்டுள்ளன. இது சம்பந்தமாக தம்பலகாமம் பொலிஸாரும் கந்தளாய் திடீர் மரண விசாரணை அதிகாரியும் சடலம் காணப்படும் இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2022இல் வெளியிடப்பெற்றது.